# உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான செய்திமடல்

உ.நா.இ.செயற்திட்டம் தொடர்பாக CHA, CPA மற்றும் HRC NPDS ஆகியவற்றின் ஒன்றிணைந்த முன்னெடுப்பு

• வெளியீடு 3 [illegible]ச / ஏப்ரல் 2006

## அண்மைக்கால இடப்பெயர்வின் போக்கு

துஷின்கா அபேசேகர (மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு)

பெப்ரவரி 2002ல் இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தனர். 12 வருடங்களுக்குப் பிறகு A9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் யாழ் குடாநாட்டுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்பட்டது. யாழ் குடாநாட்டுக்கான விமானச் சேவைகளும் ஆரம்பித்தன. புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. யுத்த நிறுத்த ஒப்பந்தம் தளம்பல் நிலையிலிருந்தாலும், மக்கள் ஒப்பீட்டளவில் அமைதியான காலப்பகுதியை அனுபவிக்கக் கூடியதாயிருந்தது. இந்தியா, கனடா, ஐக்கிய ராச்சியம் போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு மீளத் திரும்பி வரும் அகதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அது மட்டுமன்றி தம்முடைய சொந்த வீடுகளுக்கும் மாவட்டங்களுக்கும் மீளத்திரும்பும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

இருந்தபோதும், சமாதானப் பேச்சு வார்த்தைகள் தடைப்பட்டமை, யுத்தநிறுத்த மீறல்கள், ஆகியவையும் கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவும் பாதுகாப்புக்குக் குந்தகமான சம்பவங்களும் மீண்டும் ஒருதடவை இந்நாட்டு மக்களை இடப்பெயர்வுக்கும், ஆட்கடத்தல், கொலைகள், துன்புறுத்தல்கள் ஆகியவற்றுக்கு இட்டுச்செல்ல வழிசமைத்துள்ளது.

ஜனவரி 2006ல் 9 சிறுவர்கள் உள்ளடங்கலாக 24 அகதிகள் இந்தியாவின் இராமேஸ்வரத்தின் தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளனர். இந்த அகதிகள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள் இந்தியா செல்வதற்குத் தலா 5,000 ரூபா செலுத்தியுள்ளனர். பெப்ரவரி 2003ற்குப் பின்னர் இந்தியா சென்ற முதலாவது தொகுதி அகதிகள் இவர்களாவர். பெப்பரவரி 2006ல் இந்த எண்ணிக்கை 500 ஆக உயர்ந்தது. இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் யாதெனில், மீண்டும் ஒரு போர் வெடிக்கும் என்ற அச்சம் காரணமாகவும் இருதரப்புக்கும் இடையில் இடம்பெறும் யுத்தத்தில் தாம் அகப்படலாம் என்ற பயத்தின் காரணமாகவும் பெருமளவில் மக்கள் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

இவை ஒருபுறமிருக்க இலங்கையில், ஜனவரி மாதத்தில் மட்டும் திருகோணமலை மாவட்டத்தில் 3,443 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதற்கு மேலாக, யாழ் குடாநாட்டை விட்டு இதுவரை 6000 வரையான மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறி திருகோணமலை மற்றும் மன்னார் பிரதேசங்களுக்குச் சென்றுள்ளனர். இவர்களில் அனேகர், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர். சிலர் வேறு மாவட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். 500க்கு மேற்பட்டோர் பாக்கு நீரிணையைக் கடந்து இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். 98 குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்து சென்றிருந்தினர். இந்த மாவட்டங்களில் நிலவும் உயிருக்கு அச்சுறுத்தலான சூழ்நிலைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள



இந்தியாவைச் சென்றடைந்த இலங்கை அகதிகள்- தகவல்: தமிழ் நாட்டுப் பத்திரிகை

### உள்ளே

*அண்மைக்கால இடப்பெயர்வின் போக்கு* 1
துஷின்கா அபேசேகர (CHA)

*புதிதாக இடம்பெயர்ந்தவர்கள் 'பொறுத்திருந்து பார்ப்போம்' என்னும் கொள்கையை கடைப்பிடிக்கின்றனர்.* 2
லின்டன் ஜெவ்பெல்ஸ்

*நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்நிர்மாணம் என்பவற்றுக்கான கட்டமைப்புக்கள்* 3
பவானி பொன்சேகா (CPA)

*ம.உ.ஆ.வின் தலைவி கலாநிதி ராதிகா குமாரசுவாமி அவர்களுடனான ஓர் நேர்காணல்.* 5

*மன்னாரில் தொடரும் இடப்பெயர்வு* 7
பீற்றர் சின்கிளேயர்
(CHA மாவட்ட அலுவலர் மன்னார்)

*சுனாமியின் பின்னரான நிவாரணம் மற்றும் மீள் நிர்மாண நடவடிக்கைகள் சுனாமி காரணமாக (உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின்) மனித உரிமைகள் மீது செலுத்தும் தாக்கம்.* 8
நிகில் நாராயண் (CPA)

*இடம்பெயர்ந்த பெண்களுக்கான சிறந்த எதிர்காலம்* 10
சர்வதேச மகளிர் தினம் 2006 - மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் செய்தி வெளியீடு


*வெளிவராத குரல்கள்* 11
புலேந்திரன் தர்மேந்திரா (CHA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மக்கள் எவ்வளவு பாடுபடுகின்றார்கள் என்பதை இச்சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

எவ்வாறாயினும் 2006 பெப்ரவரி நடுப்பகுதியில் ஜெனிவாப் பேச்சுக்கள் தீர்மானிக்கப்பட்டதையடுத்து அதற்கு முன்னரான காலப்பகுதிகளில் இடம்பெயர்ந்து செல்வோரின் எண்ணிக்கை குறைவடையத் தொடங்கியது. இந்த நிலைமைகள் சுமுக நிலைமைக்குத் திரும்பும் என்றும் பொது மக்கள் அச்சமும் பயமும் நீங்கி பாதுகாப்பாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்றும் நாம் நம்பிக்கை கொள்வதை விட எம்மால் எதுவும் செய்யமுடியாத நிலைதான் எமக்குள்ளது.

திருகோணமலைப் பிரிவு- இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை




மூலம்: மூதூர் மற்றும் ஈச்சிலம்பற்று பிரதேச செயலர், CPN திருகோணமலை

# புதிதாக இடம்பெயர்ந்தவர்கள் 'பொறுத்திருந்து பார்ப்போம்' என்னும் கொள்கையை கடைப்பிடிக்கின்றனர்.

**லின்டன் ஜெவ்பெல்ஸ் (அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர்)**

2002 இல் யுத்த நிறுத்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதன் பின்பு, 2005 டிசெம்பரிலும் 2006 இன் ஆரம்ப வாரங்களிலும் இலங்கையின் வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் அதிகரித்திருந்த வன்முறை மட்டமானது, பொதுமக்களின் அதியுயர்ந்தளவு இடம்பெயர்வுக்கு வழிவகுத்தது.

ஆயினும் ஜெனிவாப் பேச்சுவார்த்தை பற்றிய அறிவிப்பைத் தொடர்ந்து, வன்னிக்கும் இந்தியாவுக்கும் புகலிடம் தேடிச் செல்லும் குடும்பங்களின் எண்ணிக்கையில் கணிசமான அளவு வீழ்ச்சி ஏற்பட்டது. யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலுமுள்ள UNHCR அலுவலகங்கள், வன்னிக்கு புறப்பட்டவர்கள், அங்கு வந்து சேர்ந்தவர்கள் ஆகியோரது எண்ணிக்கையில் கடுமையான வீழ்ச்சியை குறித்துக் கொண்டன. பல குடும்பங்கள் 'பொறுத்திருந்து பார்ப்போம்' என்னும் அணுகுமுறையைக் கடைப்பிடித்தமையால், அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான மிகவும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்ட பெப்ரவரி 22–23 ஆம் திகதிய பேச்சுவார்த்தை, மக்களின் இடப்பெயர்வில் அவதானிக்கக்கூடிய ஸ்திரத்தன்மையை கொண்டு வந்தது.

பெப்ரவரி மாதம் நடுப்பகுதிவரை பாதுகாப்பின்மை, பயம் என்பன காரணமாகப் புகலிடம் தேடி இடம் பெயர்ந்த 7000க்கும் கூடுதலான குடும்பங்கள் வன்னியிலுள்ள உள்ளூர் அதிகாரிகளிடத்தில் பதிவு செய்துகொண்டன.பெரும்பாலும் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த இப்புதிதாக இடம் பெயர்ந்தவர்கள், நண்பர்களுடனும் உறவினர்களுடனும் தங்கியிருப்பதனால் தாபரிப்பு வழங்கும் குடும்பங்களுக்கு மிகப் பெரிய சுமையாக உள்ளனர்.

உள்நாட்டில் இடம் பெற்ற குடித்தொகைப் பெயர்ச்சியானது, இந்தியாவின் தமிழ் நாட்டிலும் பெரும் தொகையான இலங்கை அகதிகள் உள்நாட்டின் அமைதியின்மை காரணமாக தஞ்சம் புகுவதக்கு வழிவகுத்தது. முதலாவது வள்ளம் ஜனவரி 12 ஆம் திகதி தென் இந்தியக் கரையைச் சென்றடைந்ததிலிருந்து மொத்தமாக 563 இலங்கை அகதிகள் அங்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இந்தியாவை வந்தடைதல் ஜனவரி மாதம் முழுவதிலும் கிட்டத்தட்ட தினமும் இடம் பெற்ற போதும், பெப்ரவரியின் பின் அரைப்பகுதியில் சடுதியாக வீழ்ச்சியுற்றது. இக்காலப்பகுதியில் இந்திய அதிகாரிகள் ஒவ்வொன்றிலும் 1க்கும் 12க்கும் இடைப்பட்ட பயணிகளைக் கொண்ட மூன்று வள்ளங்களையே பதிவு செய்தனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரான அன்ரோனியோ குற்ரெரேஸ் அவர்கள், ஜெனிவா பேச்சு வார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்பதாக இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சியானது, மோதல்களுக்கு ஒரு முடிவு ஏற்பட்டு, தமது நாட்டில் ஸ்திரத்தன்மையை நோக்கி தொடர்ச்சியான முன்னேற்றம் காணப்படல் வேண்டுமென்னும் இலங்கை மக்களின் பேரவாவுக்கான சான்றாகக் கருதிக் கொண்டார்.

"பேச்சுவார்த்தை பற்றிய அறிவிப்பைத் தொடர்ந்து வன்முறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியானது, பயம் காரணமாக இலங்கை மக்கள் வீடுவாசல்களை விட்டு புகலிடம் தேடி ஓடுவதற்கான அழுத்தத்தைக் குறைப்பதில் மிகவும் உடன்பாடான விளைவை ஏற்படுத்தியுள்ளது" என அவர் குறிப்பிட்டார். "இப்போக்கானது எதிர்வரும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக, மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுடைய பெரும் எதிர்பார்ப்பை இது பிரதிபலிக்கிறதென நான் நம்புகிறேன்" என்றார்.

முதற் சுற்றுப் பேச்சுவார்த்தை வெற்றியடைந்தமை, வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு தொடர்ச்சியான ஸ்திரத்தன்மையைப் பெற்றுக் கொடுத்தது. ருரேஊசு கள அலுவலகங்கள் வன்னியிலிருந்து சில மக்கள் யாழ்ப்பாணத்துக்கு திரும்புவதைக் கண்காணித்துள்ள அதேவேளை, அவர்களின் மீள்திரும்பல் பெரும் எண்ணிக்கைகளில் தொடர்ச்சியாக இடம்பெறவில்லை. பல சந்தர்ப்பங்களில் குடும்ப உறுப்பினர்கள் தமது வீடுவாசல்களினதும் உடமைகளினதும் நிலைமைகளை சரிபார்ப்பதற்காகப் போய் வந்து கொண்டிருந்தனர்.

திருகோணமலையிலுள்ள ருரேஊசு ஊழியர்கள், நகரைச் சூழவுள்ள அரச கட்டடங்களில் வாழ்ந்து வந்த குடும்பங்கள் அனைத்தும் திரும்பி விட்டதாக உறுதி செய்துள்ளனர். குடும்பங்கள் தங்கியிருந்த இரு பாடசாலைகள் இப்பொழுது வழமைபோல இயங்குவதுடன், சிறிய எண்ணிக்கையிலான குடும்பங்கள் மாத்திரமே திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிராமங்களில் தாபரிப்பு வழங்கும் குடும்பங்களுடன் தங்கியுள்ளன.

ஜனவரி 28 ஆம் திகதியன்று தமிழ் நாட்டைச் சென்றடைந்த உயர் எண்ணிக்கையான 54 பயணிகளுடன் ஒப்பிடும்போது, மார்ச் மாதத்தின் பெரும் பகுதிக்காலத்தில் பத்துக்கும் குறைவான வள்ளங்களில் குறைந்தளவு எண்ணிக்கையினரே இந்தியாவுக்கு வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37

# நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்நிர்மாணம் என்பவற்றுக்கான கட்டமைப்புகள்

பவானி பொன்சேகா (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.)

***சுனாமியின் பின்னர் நிறுவப்பட்ட கட்டமைப்புகள்.***

சுனாமியின் தாக்கத்தைத் தொடர்ந்து தேசிய மற்றும் பிரதேச மட்டங்களில் பல பொறிமுறைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. தேசிய மட்டத்தில் இலங்கை அரசாங்கம் தேசிய நடவடிக்கைகளுக்கான நிலையத்தையும் (CNO), மீட்புப்பணி மற்றும் நிவாரணம் என்பவற்றுக்கான செயலணி (TAFRER), தேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயலணி (TAFREN), வினியோகம், சட்டம் ஒழுங்கு ஆகியவற்றுக்கான செயலணி (TAFLOL) ஆகிய மூன்று செயலணிகளையும் நிறுவியது. 2005 பெப்ரவரியில் தேசிய நடவடிக்கைகளுக்கான நிலயம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் CNO, TAFRER, TAFLOL ஆகியவற்றுக்குப் பதிலாக நிவாரணப் பணிக்கான செயலணியையும் (TAFOR) 2005 நவம்பரில் அரசாங்கம் மாறியதைத் தொடர்ந்து மேலும் பல கட்டமைப்புகளையும் உருவாக்கியது. நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபாடு கொண்டுள்ள பல செயற்பாட்டாளர்களின் விபரங்கள் பின்வருமாறு:

***சம்பந்தப்பட்ட அமைச்சுக்களும் ஏனையவையும்***

முரண்பாட்டின் காரணமாக நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணம் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துவதற்கென கடந்த பல வருடங்களில் பல கட்டமைப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டன. முரண்பாடு தொடர்பான பிரச்சினைகளுக்குரிய விடயங்களைக் கையாளுவதற்காகப் பல அமைச்சுகளுக்கு பொறுப்புக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன:

- நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சு (MRRR)
- விவசாயம், நீர்ப்பாசன மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு;
- வன்னி புனர்வாழ்வுக்கான அமைச்சு;
- கிழக்கு அபிவிருத்திக்கான அமைச்சு;
- நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சு;
- வீடமைப்பு நிர்மாணக் கைத்தொழில், கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு;

இவற்றுடன் ஏனைய பல அரச நிறுவனங்களும் அலுவலர்களும் முரண்பாடு காரணமான புனர்வாழ்வு விடயங்களில் ஈடுபட்டுள்ளனர். உதாரணமாக:

- அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்;
- வடக்கின் மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அதிகார சபை (RRAN)
- REPPIA

2005 நவம்பரில் அரசாங்கம் மாறியதைத் தொடர்ந்து, மீள் குடியேற்ற அமைச்சு, தேச நிர்மாணம், மற்றும் அபிவிருத்தி அமைச்சு என்னும் இரு அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டன. இவை முன்னைய நிவாரண, புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு, மற்றும் வன்னி புனர்வாழ்வுக்கான அமைச்சு என்பவற்றின் கடமைகள், அதிகாரங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளதோடு, கிழக்கு அபிவிருத்திக்கான அமைச்சு, இந்த இரு அமைச்சுகளுக்கும் இடையே தற்பொழுது பிரிக்கப்பட்டுள்ளது. மீள் நிர்மாண மற்றும் அபிவிருத்தி முகவரகம் என்பது தேர்தல்களுக்குப் பின்பு உருவாக்கப்பட்ட இன்னொரு அரச நிறுவனமாகும்.

UN OCHA யின்படி TAFREN, TAFOR, வீடமைப்பு மீள் நிர்மாண அலகு (THRU) TAP, REPPIA ஆகியவற்றுக்குப் பதிலாக புனர் நிர்மாண மற்றும் அபிவிருத்தி அதிகார சபை (RADA) இயங்கவுள்ளது. RADA வினதும் தேச நிர்மாண அமைச்சினதும் ஓர் உடன்பாடான அம்சம் யாதெனில், முரண்பாடு, சுனாமியின் தாக்கம் என்பவை இரண்டுடனும் சம்பந்தப்பட்ட கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றைக் கையாளுவதும், முரண்பாடு மற்றும் சுனாமி ஆகிய இரண்டினாலும் பாதிக்கப்பட்ட இரு சாராரையும் சமனாக நடத்துவதற்கான ஒன்றிணைந்துள்ள உபாயத்தை ஏற்படுத்திக் கொள்வதை உறுதி செய்தலுமாகும்.

> **மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகளுக்கு தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சு பொறுப்பாக விளங்குகின்றது.**

***தேச நிர்மாண அமைச்சு***

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களது தலைமையில் இயங்கும் தேச நிர்மாண அமைச்சின் இணைய தளத்தின்படி, முரண்பாடு, சுனாமி ஆகிய இரண்டும் சம்பந்தப்பட்ட புனர்வாழ்வு, புனர்நிர்மாண கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் விருத்தி செய்வதற்கான பொறுப்பு இதனைச் சார்ந்ததாகும். கூறப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள் என்பவற்றிலிருந்து, தேச நிர்மாண அமைச்சானது புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றின் மீது தூர நோக்குடன் கருத்திற் கொள்ளும் பூர்வாங்க முயற்சிகள் மீது கவனம் செலுத்துகிறது. புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி அதிகார சபை (RADA) வடக்கிலும், கிழக்கிலும் உடனடியான மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான செயலணி (SIHRAN), வடக்கின் மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அதிகார சபை, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லெண்ண ஒருங்கிணைப்புக்கான ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம் ஆகியன யாவும் தேச நிர்மாண அமைச்சின் ஒரே கூரையின் கீழ் இயங்கவுள்ளன. ஓர் உடன்பாடான அம்சம் யாதெனில் அமைச்சானது முரண்பாடு, சுனாமியின் தாக்கம் என்பவை இரண்டுடனும் சம்பந்தப்பட்ட கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றைக் கையாளுதலும், முரண்பாடு மற்றும் சுனாமி ஆகிய இரண்டினாலும் பாதிக்கப்பட்ட இரு சாராரையும் சமனாக நடத்துவதற்கான ஒன்றிணைந்துள்ள உபாயத்தை ஏற்படுத்திக் கொள்வதை உறுதி செய்தலுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீள் குடியேற்ற அமைச்சு*

வர்த்தமானி அறிவித்தலின்படி அமைச்சர் றிஷாட் பதூர்டீன் தலைமையில் இயங்கும் மீள் குடியேற்ற அமைச்சானது, முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டு உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்துக்கும், புனர் வாழ்வுக்குமான திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கவும், மீள் குடியேற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள கொடையாளர்கள், ஏனைய செயற்பாட்டாளர்கள் ஆகியோரைத் தேச நிர்மாண அமைச்சுடன் ஒருங்கிணைக்கவும் உள்ளது. இந்த அமைச்சின் ஆணைக்குட்பட்ட விடயங்களை வர்த்தமானி தெளிவாக எடுத்துக் கூறினும், அமைச்சின் கடமைகள், அதிகாரங்கள் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது. ஏனெனில் இந்த அமைச்சு, தேச நிர்மாண அமைச்சின் கடமைகளையும் மறுபடியும் மேற்கொள்ளலாமென்னும் நிலைமை உண்டாகலாம். இதன் விளைவாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக சிறிதளவு திட்டமிடல் இடம் பெற்றுள்ளதோடு அமைச்சின் அதிகாரிகள் மந்திரி சபையின் அறிவுறுத்தல்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தேச நிர்மாண அமைச்சைப் போலன்றி, மீள் குடியேற்ற அமைச்சுக்கு முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களை மட்டுமே கவனத்தில் கொள்ளுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இது, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் மீள் குடியேற்றப் பிரச்சினையை யார் கவனிக்கப் போகிறார்கள் என்னும் வினாவை எழுப்ப வழிவகுக்கிறது. முன்னைய பிரச்சினைக்குரிய விடயங்கள் எடுத்துக் காட்டியவாறு, முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி மந்தகதியில் வழங்கப்பட்டமையுடன் ஒப்பிடுகையில், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் உதவி பெற்றுக் கொண்ட வேகம் போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். சுனாமியால் பாதிக்கப் பட்டவர்களைப் பொறுத்தவரை முன்னேற்றம் காணப்படினும், எதிர் காலத்தில் அவர்களின் தேவைகள் மறக்கப்படாதிருப்பதும் மிக முக்கியமாகும்.

**அனைவருக்கும் மீள்கட்டுமாண மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவுள்ள அரசாங்கத்தின் கவன மையமாக RADA விளங்குகின்றது.**

### RADA

புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி அதிகாரசபை (RADA) என்பதும் தேர்தல்களுக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஒரு புதிய கட்டமைப்பாகும். சுனாமியின் தாக்கம் காரணமாக முன்பு உருவாக்கப்பட்ட செயலணிகளைப் போலன்றி, RADAவும் முரண்பாடு தொடர்பான பிரச்சினைகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளும். தேச நிர்மாண அமைச்சைப் போலவே முரண்பாடு, சுனாமி ஆகிய இரண்டினதும் பிரச்சினைகள் மீது கவனத்தைச் செலுத்தும் ஒரு கட்டமைப்பே இயங்கவுள்ளது. இதனால் உதவி வழங்கல், வீடுகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற பல விடயங்களும் சமமாக நோக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

RADAவை அதிகார சபையாக மாற்றுவதற்கான சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப் படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுவதாக தகவல்கள் கிடைக்கப்பெறினும், இதுவரை அம்மாதிரியானதொரு சட்டமூலம் பகிரங்கப்படுத்தப்படவோ அல்லது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவோ இல்லை. TAFREN அமைப்புக்குப் பதிலாக தேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான அதிகாரசபையொன்றை (ARN) உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ARN உருவாக்கப்படாத போதும், சட்டமூலத்தின் நகல் தயாரிப்பதில் வெளிப்படையான தன்மையோ அன்றி பங்கு பற்றுதலோ இல்லாதிருப்பதுடன் உரிய செயற்பாட்டாளர்களுடனும், பாதிக்கப்பட்ட சமூகங்களுடனும் எவ்வகையான கலந்துரையாடலும் இடம் பெறவில்லை. அதிகார சபை உருவாக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட இரகசியத்தன்மையோடு, RADAவின் சரியான வகிபங்கு பற்றியும் தெளிவின்மை நிலவுகிறது. சுயுனுயு இணையதளத்தின்படி, இது நாடுமுழுவதிலும் மீள் நிர்மாண மற்றும் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துவதற்கும், சுனாமி நிறுவனங்களையும் MRRR இன் குறிப்பிடத்தக்க பகுதியையும் ஈடு செய்வதற்கும் உருவாக்கப்பட்டதாகும். தற்போதுள்ள கட்டமைப்புகளினூடாகவே RADA இயங்கவுள்ள தாகவும், ஆயினும் இறுதியில் இது "நாடு முழுவதிலும் இயற்கையாலும் மனிதனாலும் உருவாக்கப்பட்ட சுனாமிக்குப் பின்னரான மற்றும் முரண்பாட்டுக்குப் பின்னரான சகல அனர்த்தங்களின் மீள்நிர்மாண மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ள அரசாங்கத்தின் கவனமையமாக இயங்கவுள்ளது" என இணையதளம் மேலும் கூறுகின்றது.

*ஏனைய கட்டமைப்புகள்*

மேற்படி கட்டமைப்புகளுக்கும் மேலதிகமான நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண முயற்சிகளில் மாகாண, மாவட்ட மட்டங்களில் பணியாற்றும் செயலாளர்கள் (அரசாங்க அதிபர்கள் எனவும் சொல்லப்படுவார்கள்), காணி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் உள்ளனர். மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களினதும் வகிபங்கு கருத்தில் கொள்ளப்பட்டு, அரச நிறுவனங்களின் முக்கியத்துவம் வெளிப்படையாகத் தெரியப்படுத்தப்படல் வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு மத்தியிலிருந்து சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மாகாண சபைகள் தமது அதிகார வரம்புக்குள் காணி, புனர்வாழ்வு, புனர் நிர்மாணம், ஏனைய சம்பந்தப்பட்டுள்ள விடயங்களையும் அடக்குகின்றன. மாகாண சபைகளுக்கு இம்மாதிரியான அதிகாரங்கள் இருப்பினும், நடைமுறையில் மத்திய அரசு முக்கியமான செயற்பங்கு வகிப்பதுடன் இறுதி முடிவும் அதனுடையதாகும். இது சுனாமி ஏற்பட்டபோது வெளிக்காட்டப்பட்ட மீளளிப்புகளிலிருந்து தெளிவானது.மத்திய அரசே கொள்கைகளையும் திட்டங்களையும் வெளியிட்டபோது மாகாண சபைகளினதும் உள்ளூர் செயற்பாட்டாளர்களினதும் ஈடுபாடு அதி குறைவாகவே இருந்தது.

*மேலும் வட கிழக்கு மாகாண சபை*

(NEPC) ஒரு சுயாதீன அரசியல் அலகாகத் தொழிற்படுவதில்லை என்பதையும் 1990 மார்ச் மாதத்திலிருந்து அதன் சட்டவாக்கக் கிளையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கவில்லை என்பதையும் ஞாபகத்திலிருத்திக் கொள்ளல் வேண்டும். நடைமுறைத் தேவைகளுக்காகNEPC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நிர்வாக அலகாக மாத்திரமே உள்ளது.

வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செயலகம் (PDS), தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO), பெண்கள் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நிலையம், பொருளாதார ஆலோசனை இல்லம் மற்றும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் பணியாற்றும் ச.அ.சா.நிறுவனங்கள், அ.சா.நிறுவனங்கள் போன்ற பல்வேறு அலகுகள் நிவாரண, புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

*முடிவுரை*

நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளில் ஏற்கெனவே பல கட்டமைப்புகள் ஈடுபட்டுள்ளன என்பது தெளிவாகிறது. புதிய மூன்று கட்டமைப்புகள் (தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான அமைச்சு, மீள் குடியேற்ற அமைச்சு மற்றும் RADA), தற்போதுள்ளவற்றுக்குப் பதிலாகவும் அவற்றை ஒன்று சேர்ப்பதற்காகவும் இயங்கினாலும், இந்த நடைமுறையில், வழமையாகக் காணப்பட்ட அடிப்படையான குறைபாடுகளான இரட்டைத் தன்மை, அதிகாரப் படிமுறை கொண்ட நிருவாகம் என்பன வினைத்திறன் மிக்க, பயனுறுதி கொண்ட மீளளிப்புக்குத் தடையாக இருப்பதை முன்னைய அனுபவங்கள் காட்டியுள்ளன. எனவே கட்டமைப்புகளை உருவாக்கும் போது அரசாங்கம் கடந்த கால அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டு, தற்போதுள்ள கட்டமைப்புக்களைப் பூரணப்படுத்துவதாக அமையக் கூடியவாறு புதியவற்றை உருவாக்குதலல்லாது மீண்டும் செய்தல், ஒரே சமயத்தில் ஒத்த விடயங்களைச் செய்தல் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும். மேலும் வெளிப்படையான தன்மை, பங்கேற்பு, ஆலோசனை பெறுதல் போன்ற நல்ல ஆட்சிக்குரிய கோட்பாடுகள் நிவாரணம், புனர்வாழ்வு, புனர் நிர்மாண பூர்வாங்க முயற்சிகளில் பின்பற்றப்படல் வேண்டும்; குறிப்பிட்ட பரப்புகளில் விசேட சிறப்பியல்புகள் மீது கவனம் செலுத்துதல்; உள்ளூர் அறிவையும் சக்தியையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இறுதியாக, RADA போன்ற அலகுகள் நடந்து முடிந்தவை பற்றிய கணிப்பீட்டை எடுத்துக் கொண்டு, தற்போதுள்ள முறைமையைப் பூரணப்படுத்தல் திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் முறைப்படுத்திக் கூறுவதுடன் நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாண செயன்முறையில் உள்ளூர் செயற்பாட்டாளர்கள் முக்கிய வகிபங்கு வகித்தலையும் உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி கலாநிதி ராதிகா குமாரசுவாமி அவர்களுடனான ஓர் நேர்காணல்.

**திரு. சேனகா திசநாயக்கா, நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் - உள் நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான தேசியப் பாதுகாப்பு மற்றும் நிரந்தரத் தீர்வுகளுக்கான திட்டம் NPDS - அவர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கான கருத்திட்டத்துக்காக மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்**

**தொகுப்பு: சுரான் திசநாயக்கா**

பின்வருவது வீட்டு வன்முறை எனப்படும் பிரச்சினைக்குரிய விடயமும் தற்போது அதற்கு கிடைக்கக்கூடிய பரிகாரங்களும் பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவியான கலாநிதி ராதிகா குமாரசுவாமி அவர்களுடனான ஓர் நேர் காணலாகும். இந்தக் கலந்துரையாடலானது வினா – விடை வடிவத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**வினா (சேனகா திசநாயக்கா):**
**இலகுவில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய உள்நாடடில் இடம் பெயர்ந்துள்ள பெண்களுக்கும் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வரும் ஏனைய பெண்களுக்கும் அரசாங்கத்தினால் அனுசரணை வழங்கப்பட்டுள்ள எவ்வகையான சட்ட ரீதியான உதவி கிடைக்கக் கூடியதாயிருக்கிறது?**



**கலாநிதி ராதிகா குமாரசுவாமி**

விடை (கலாநிதி ராதிகா குமாரசுவாமி): வீட்டு வன்முறையைப் பொறுத்தவரை வறுமைக் கோட்டுக்கு மேலிருப்பவர்கள் அதற்குக் கீழ் இருப்பவர்களைப் பார்க்கிலும் அதிக அனுகூலத்தைக் கொண்டுள்ளனர் எனக் கூற முடியும். இம்மாதிரியான சம்பவங்கள் நிகழும்போது, இவற்றுக்குரிய நடவடிக்கையை எடுப்பதற்காக சட்ட உதவி ஆணைக்குழுவிடம் தற்பொழுது மிக விசேடமான நிகழ்ச்சித் திட்டமொன்று இருப்பதாக நான் நினைக்கிறேன். பல மகளிர் குழுக்களும் - உதாரணமாக Women in Need – போன்றவையும் உள்ளன. நான் நினைக்கிறேன் சிவில் சமூகமும் இம்மாதிரியான பிரச்சினைகள் பற்றி மெதுவாக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

**வினா: தற்போதைய சட்ட முறைமையும் உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத அதன் தன்மையும், இம்மாதிரியான பெண்கள் சட்டரீதியான பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள முன்வருவதற்கான அவர்களின் ஊக்கத்தைக் குறைக்கின்றனவா?**

விடை: வீட்டு வன்முறை ஓர் இடைக்கால உத்தரவானதால் விரைவாக கவனத்தில் கொள்ளப்பட்டு அதற்குரிய பரிகாரமும் உடனடியாக காணப்படும். இது வீட்டு வன்முறை பற்றிய சட்டவாக்கத்தின் ஓர் உடன்பாடான வெளிப்பாடாகும். ஆயினும் குற்றவியல் சட்டத்தின் கீழ் கணவர்மார்களின் மீது வழக்குத் தொடருதல் சம்பந்தமாக நீடித்த காலத்தின் பின்னரும் பலர் குற்றவாளிகளாகக் காணப்படப் போவதில்லை.

**வினா: எனவே நீதிமன்ற முறைமையை நாடுவதற்குப் பதிலாக மத்தியஸ்த சபை வடிவிலான முறைமையை நாம் ஏன் பயன்படுத்த முடியாது?**

விடை: நல்லது. அது சில சந்தர்ப்பங்களில் பலனளிக்கிறது. வீட்டு வன்முறைப் பிரச்சினைகளைப் பற்றி தெரிந்திராத இளைஞனொருவன் சம்பந்தப்பட்ட வீட்டு வன்முறை சம்பவமொன்றில் நானே ஒரு முறை ஈடுபாடு கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தது. இம்மாதிரியான செயல்களை மனித உரிமைகள் ஆணைக்குழு சகித்துக் கொள்ள மாட்டாதென அவனுக்கு தெரியப்படுத்தியதும், தனது மனைவி மீதான வன்முறைகளை அவன் நிறுத்திக் கொண்டான். எனினும், சட்டத்தைப்பற்றி தெரிந்த கொண்டுள்ளவர்கள் இன்னமும் வன்முறைகளைப் புரியும் போதும், திரும்பத் திரும்ப குற்றங்களை இழைக்கும் போதும், இம்மாதிரியான பிரச்சினைக்குரிய விடயங்கள் மீது கவனஞ் செலுத்துவதற்கு பாதுகாப்பு வழிமுறையமைப்புக்கள் கட்டாயமாக தேவைப்படுகின்றன.

**வினா: சிறுவர்களுக்கும் வீட்டு வன்முறைக்குமிடையிலான தொடர்பு யாது?**

விடை: ஆம், உண்மையிலேயே சிறுவர்களே வீட்டு வன்முறை காரணமாக நேரடியாக துயரத்தை அனுபவிப்பவர்களாவர். வீட்டு வன்முறையை நேரடியாகப் பார்க்கும் சிறுவர்கள், இம்மாதிரியான நடத்தைக் கோலங்களைப் பார்த்திராதவர்களைப் பார்க்கிலும் 1000 மடங்குகள் வன்முறையைப் புரியும் அல்லது குற்றவாளிகளாக மாறும் சாத்தியக்கூறைக் கொண்டிருப்பதாக ஆய்வு காட்டுகிறது. இம்மாதிரியான நடத்தையை நேரடியாக பார்க்கும் சிறுமிகள், அதனைப் பார்காதவர்களைக் காட்டிலும் துஷ்பிரயோகத்துக்கும் சுரண்டலுக்கும் இலகுவாக இடம் கொடுக்கக் கூடிய சாத்தியத்தைக் கொண்டிருப்பதோடு இறுதியில் அவர்களின் வாழ்க்கை கடத்தி விற்பனை செய்யப்படுவதிலும் விபசாரத்திலும் முடிகிறது. எனவே சிறுவர்களுக்கும், வீட்டு வன்முறை மற்றும் வாழ்க்கையில் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதற்கும் நேரடியான விளைவு காணப்படுகிறது.

**வீட்டு வன்முறைச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது**

**வினா: எனவே இது தொடர்பாக அரசின் கடப்பாடு யாது?**

விடை: அரசின் கடப்பாடானது பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதும், வீட்டு வன்முறை ஒரு சட்ட விரோதச் செயலென்றும் அது சகித்துக் கொள்ளப் படமாட்டாதென்றும், அதற்கெதிராக அரசு சட்ட நடவடிக்கை எடுக்குமென்றும் அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தலுமாகும். எனக்குத் தெரியும், உள்நாட்டில் இடப்பெயர்ந்தவர்கள் வாழும் பிரதேசங்களில் இதனை மேற்கொள்வது கடினமானதென்று. எனினும் இது கட்டாயமாகச் செய்யப்பட வேண்டியதாகும்.

**வினா: சர்வதேச ரீதியாக நீங்கள் பெற்றுக் கொண்டுள்ள அனுபவத்தின்படி இலங்கை இதனை ஏற்று அங்கீகரித்துக் கொண்டமை பற்றி நீங்கள் திருப்தியடைகிறீர்களா?**

விடை: ஒப்பிட்டுப் பார்ப்பதை நான் விரும்பவில்லை. ஆயினும் 1980 களில் மகளிர் குழுக்கள் இப்பிரச்சினைக்குரிய விடயங்களை எழுப்பிய போது, கடுமையான எதிர் விளைவை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் குடும்பங்களை நாசமாக்குபவர்கள் போன்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டனர். ஆனால் தற்பொழுது இப்பிரச்சினையைக் கையாளுதல் மகளிர் விவகார அமைச்சின் முக்கிய போக்காக உள்ளது. எனவே இதற்கான முயற்சியைப் பொறுத்தவரை, இது ஒரு பெரிய நடவடிக்கையும் வெற்றியுமாகும்; ஆயினும் அதனை நடைமுறைப்படுத்தலும், பெண்களின் வாழ்க்கையை அது சென்றடைகிறதென்பதை உறுதி செய்தலும் அடுத்தபடி நிலைகளாகும்.

**வினா: பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான ஐ.நா வின் விசேட தொடர்பாளர் (Special Rapporteur on Violence Against Women) என்ற அமைப்பின் வகிபங்கு யாது? சர்வதேச அரங்கில் அவர்கள் வன்செயலிலிருந்து பெண்களை எவ்வாறு பாதுகாக்கின்றனர்?**

விடை: உலகம் முழுவதிலுமுள்ள மகளிர் குழுக்களின் மிகப் பெரிய அளவிலான அழுத்தம் காரணமாக 1994 இல் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான ஐ.நா வின் விசேட தொடர்பாளர் அமைப்பு அமைக்கப்பட்டது. இதுவும் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒரு வழிமுறையமைப்பாகும். வீட்டு வன்முறையுடன் மாத்திரமன்றி, பாலியல் வல்லுறவு, பாலியல் ரீதியான தொந்தரவு, கடத்தி விற்றல் மற்றும் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகம் என்பன உள்ளடங்கலாக, சமூகத்திலும் அரசினாலும் ஆயுதப் பிணக்குகளின் போதும் (**உ.நா.இ.** கிராமங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் பரவலாகக் கேள்விப்படுவது) மரபு வழிமுறையாக வழக்கத்திலுள்ள நடைமுறைகள் மற்றும் வன்முறை என்பன தொடர்பாகவும் நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய பரந்த அளவிலான ஆணையைக் கொண்டுள்ளது. உலகின் எல்லாப் பகுதிகளிலும் விசேட தொடர்பாளர் (Special Rapporteur) களத்துக்குச் சென்று பார்த்தல் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளல், தரங்களை மேம்படுத்துதல் என்பவற்றை மேற்கொள்ளுகிறது.

**வினா: இலங்கையில் வீட்டுப் பணியாளர்களை பாதுகாப்பதற்கு எம்மாதிரியான சட்டங்கள் உள்ளன?**

விடை: உண்மையில் எங்களிடம் சட்டங்கள் இல்லை. இங்கு ஒரு பெரிய இடைவெளி உண்டு. ஆனாலும் வேடிக்கைக்குரிய விடயம் என்னவென்றால் எங்களுடைய தொழிலாளருக்கு மத்திய கிழக்கு மிக மோசமான காரியங்களைச் செய்வதாகவும், அவர்களைப் பாதுகாக்க அவர்களிடம் சட்டங்கள் இல்லையெனவும் நாங்கள் சொல்லி வருகிறோம். உண்மையில் வீட்டு வேலைக்காரர்களை பாதுகாப்பதற்கு எங்களிடம் சட்டங்கள் இல்லை. சிறுவர் மற்றும் வீட்டு வேலைக்காரர்கள் தொடர்பான மோசமான மீறல்கள் இங்கு காணப்படுகிறது. பிரச்சினை என்னவென்றால் வீட்டு வேலைக்காரர்களிடம் சட்டங்கள் தங்களைப் பாதுகாக்கச் செய்வதற்கு போதிய அதிகாரம் கிடையாது. இது ஒரு மிக முக்கியமான விடயம் என நான் நினைக்கிறேன்.

**வினா: ஆனால் நாம் வீட்டு வன்முறை மட்டும் பற்றிப் பேசும்போது கணவன் மனைவி பற்றிய பிரச்சினைக்குரிய விடயங்கள் மட்டும் ஏன் தோன்றுகின்றன?**

விடை: சில நாடுகளில் இப்பரப்பெல்லைக்கும் அப்பால் அவர்கள் செல்கின்றனர். ஆயினும் சில சம்பவங்களே உண்டு. அவர்கள் கூறுவது போல வழமையாக சிறிதளவு நெருங்கிய நட்புடன் ஈடுபாடு கொண்டதாயிருக்கும்.

**வினா: முழு சமூகத்துக்கும் நீங்கள் கூற விரும்பும் செய்தி யாது?**

விடை: நான் நினைக்கிறேன் யுத்தத்தினால் சீரழிந்துள்ள நாடொன்றுக்கு வழங்கக் கூடிய செய்தி யாதெனில் சமாதானத்துக்காக பெண்கள் ஒன்றிணைய வேண்டும். வீட்டு வன்முறை சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட இவ்வேளையில் அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது முக்கியமாகும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் தொடரும் இடப்பெயர்வு

பீற்றர் சின்கிளேயர் (CHA மாவட்ட அலுவலர் மன்னார்)

23 டிசம்பா 2005 அன்று விக்டோரியா குடியிருப்புத் திட்டத்தில் வாழும் பொதுமக்கள் மீது ஒழு பழிவாங்கும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. 100 வீடுகளைக் கொண்டுள்ள இந்த வீடமைப்புத் திட்டத்தில் வாழும் மக்கள் ஏற்கனவேயே இடம் பெயர்ந்து வாழ்பவர்களாகும். கடற்படையினர் மீது கிளைமோர் தாக்குதல் ஒன்று இடம்பெற்றதைத் தொடர்ந்து அதன் அயலிலுள்ள துள்ளுகுடியிருப்பு கிராமத்து மக்கள் தமது வீடுகளைவிட்டுத் தப்பியோடி அயல் கிராமத்திலுள்ள கவ்வியன் குடியிருப்பில் தஞ்சம் அடைந்தனர். ஆனால் விக்டோரிய கிராம மக்கள் சம்பவம் இடம்பெற்ற தினம் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது போயிருந்தது. இதனால் இவர்கள் தாக்கப்பட்டும் சில பெண்கள் பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மாலை 7மணிவரையும் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொதுமக்களை வண.பிதா வின்சென்ட்பற்றிக் வேறு சில அதிகாரிகளுடன் தலத்திற்கு விஜயம் செய்து அவர்களின் விடுதலைக்கு உதவி செய்தார். அவர்களுக்குப் பேசாலை தேவாலயத்தில் தங்க இடவசதி செய்து கொடுத்த பிற்பாடு அடுத்த இரு நாட்களுக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் ஏற்பாடு செய்தார்.


***சம்பவத்தின் பின்னர் வாழ்வாதாரத்தின் மீது ஏற்பட்ட பாதிப்பு***

இந்த வன்செயலில் நான்கு வீடுகளும் மூன்று கடைகளும் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டதுடன் மேலும் பல வீடுகளும் சேதமாக்கப்பட்டன. அனைத்து வீடுகளும் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டுள்ளன. மேலும் மக்கள் எவரும் தமது வீடுகளுக்குத் திரும்பிச்சென்று பழையபடி வாழ்க்கையைத் தொடர முடியாத வண்ணம் வீடுகளின் கதவுகளும், யன்னல்களும் கழற்றி எடுக்கப்பட்டுள்ளன. தம்முடைய வாழ்வைத் தொலைத்துவிட்ட நிலையில் இந்த மக்கள் உள்ளனர். விக்டோரியா கிராமத்து மக்களும் துள்ளுகுடியிருப்பு கிராமத்து மக்களும் உடுத்த உடையுடன் சதாதாரண வாழ்வை வாழ முடியாத துர்பாக்கிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர். ஏனைய இடம்பெயர்ந்த மக்கள் மடு, சாந்திபுரம் மற்றும் பேசாலை போன்ற இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

திரு.இமானுவல் குறூஸ், திருமதி.அந்தோனிக்கன் குறூஸ், திரேசா குறூஸ் ஆகிய ஒரே குடும்பத்தைச்



***துள்ளுகுடியிருப்பு மற்றும் பேசாலைக் கிராமங்களைச் சேர்ந்த உ.நா.இ***



சேர்ந்தவர்களும் இவர்களது உறவினர்களான இன்னொரு குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகனும் வீட்டிற்குள் பூட்டிவைத்து எரியூட்டப்பட்டிருந்தார்கள். இரு குடும்பங்களையும் சேர்ந்த எஞ்சிய குழந்தைகள் பெற்றோரோ பாதுகாவலரோ இன்றி அனதாரவான நிலையில் உள்ளார்கள். இதேபோன்று திரு.தத்தேயு தனது மனைவியையும் குழந்தையையும் இழந்து தவிக்கின்றார். அவர்கள் அணிந்திருந்த நகைகள் களவாடப்பட்டுள்ளன. வேறொரு சம்பவத்தில், தனது ஒரு காலை இழந்த ஞானப்பிரகாசம், தன்னுடைய சக்கர நாற்காலியிலிருந்து கீழே விழுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளதுடன் சக்கர நாற்காலியும் சேதமாக்கப்பட்டதால் அவரால் எழுந்து நடமாடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு தாக்குதல்களில் மக்கள் தாக்கப்பட்டும் கொல்லப்பட்ட சம்பவங்களுக்கு சில உதாரணங்களே இவையாகும்.

***தற்போதைய நிலவரம்***

ZOA, யுனிசெவ், இ.செ.ச, வேர்ல்ட் விஷன், யு.என்.எச்.சி.ஆர், OFFER, மற்றும் CHA உள்ளிட்ட பல நிறுவனங்கள் இந்த சம்பவத்தை அடுத்து அவ்விடத்திற்கு விஜயம் செய்து வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாய், போர்வைகள், பிளாஸ்ரிக் வாளிகள், கூடாரங்கள், மருத்துவ உதவிகள், உலருணவுப் பொருட்கள், விளக்குகள், உடுபிடவைகள், பாடசாலை உபகரணங்கள், சமைத்த உணவு, பாடசாலைச் சீருடைகள், சப்பாத்துகள் ஆகியவற்றை வழங்கியுதவியிருந்தன. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வழங்கப்பட்ட பணத்தொகை பெரிதும் உதவக்கூடியதாகவிருந்தது. அரசாங்க அதிபர், இராணுவத்தினர், ஏனைய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர் சம்பவம் இடம்பெற்று 46 நாட்களுக்குப் பின்னர் பொது மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடி இவ்வாறானதொரு சம்பவம் இனிமேலும் இடம்பெறாது என்று உறுதி கூறினர். இந்த உறுதிப்பாட்டைத் தொடர்ந்து 84 குடும்பங்கள் மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்று பழையபடி வாழ்வதார நடவடிக்கைகளில் ஈடுபட முன்வந்துள்ளன. அரசாங்கமும் ஏனைய அதிகாரிகளும் இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இருந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் போது தோன்றும் நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்குத் திட்டங்கள் வகுக்கப்படுவது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02 மே 2006ல் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்**

இந்த தகவல்கள் கீழ்காணும் செயற்பாட்டாளர்கள் தமது களவிஜயத்தின் பின்னர் வழங்கியவை "ACF, ACTED, Save the Children, UNOCHA, UNHCR, World Concern மற்றும் ZOA"

| பிரதேச செயலர் பிரிவு | கிராம சேவையாளர் பிரிவு / கிராமம் | உ.நா.இ. முகாமின் பெயர் | உண்மையான பி.செ. பிரிவு | உண்மையான கி.சே. பிரிவு | இடம் பெயர்ந்த குடும்பங்கள் | இடம் பெயர்ந்த தனிநபர்கள் | குழந்தைகள் 5 | வயது வந்தோர்,60 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கோரளைப்பற்று வடக்கு (வாகரை) | கதிரைவெளி | கதிரைவெளிப் பாடசாலை | மூதூர் - திருகோணமலை | தோப்பூர் மணற்சேனை | 55 | 172 | 30 | 10 |
| கோரளைப்பற்று தெற்கு (கிரான்) | கிண்ணியடி | கிண்ணியடி | கோரளைப்பத்து தெற்கு கிரான் | பிரம்படிதீவு | 23 | 92 | | |
| மண்முனை மேற்கு (வவுணதீவு) | ஈச்சந்தீவு பாடசாலை | ஈச்சந்தீவு இடை நிலைப் பாடசாலை | மண்முனை மேற்கு வவுணதீவு | மங்கிக்காடு (123), பள்ளக்காடு (23) | 146 | 650 | 78 | 15 |
| மண்முனை மேற்கு (வவுணதீவு) | இருட்டுச்சோலை | புளியடிமடு கோவில் | மண்முனை மேற்கு வவுணதீவு | புளியடிமடு | 90 | 360 | 45 | 10 |
| மண்முனை மேற்கு (வவுணதீவு) | கலிமடு | கலிமடு | மண்முனை மேற்கு வவுணதீவு | கரடிப்பூவல் | 49 | 166 | | |
| | | | | மொத்தம் | 363 | 1440 | 153+ | 35+ |

# சுனாமியின் பின்னரான நிவாரணம் மற்றும் மீள் நிர்மாண நடவடிக்கைகள், சுனாமி காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மனித உரிமைகள் மீது செலுத்தும் தாக்கம்.

நிகில் நாராயண் (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்)

அமைப்புகளினதும் சுனாமிக்குப் பின்னரான நிவாரண மற்றும் மீள்நிர்மாண முயற்சிகள், சுனாமி காரணமாக உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களின் மனித உரிமைகளைத் தொடர்புபடுத்தி பல பிரச்சினைக்குரிய விடயங்களை கிளப்பியுள்ளன. விடயக் கற்கைகளாக அம்பாறை, காலி மாவட்டங்களை சீர் தூக்கிப் பார்க்கும் போது, சுனாமியினால் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரின் மனித உரிமைகள் மிகக் கூடியளவில் பாதிக்கப்பட்டுள்ள நடவடிக்கைத்துறை, வீடமைப்பு மற்றும் மீள் குடியேற்றத்துறையாகும். இக்கட்டுரையானது வீடமைப்பு மற்றும் மீள் குடியேற்றத் துறையில் தோன்றியுள்ள மிகவும் அவசரமான மனித உரிமைப் பிரச்சினைகளை இனங்காண்பதற்கு எத்தனிக்கிறது.

***தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் பங்கேற்பதற்குமான உரிமை.***

வேறிடத்தில் குடியமர்த்துதல், மீள் குடியேற்றம் என்பன தொடர்பான திட்டமிடல், முகாமைத்துவம் என்பவற்றில், உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கு பூரணமான தகவல்கள் கிடைப்பதையும் அவர்களின் பங்கேற்பையும் சுயாதீனமான, தெரிவிக்கப்பட்ட சம்மதத்தையும் உறுதி செய்து கொள்ளல் அரசாங்கத்தின் அடிப்படையான கடப்பாடாகும். இதற்கும் மேலதிகமாக, போதிய வீடமைப்பு, இடம் நகர்தலுக்கும் வாழ்விடத்தைத் தெரிவு செய்வதற்குமான சுதந்திரம், உயிர் வாழுதல், வாழ்வாதாரம் மற்றும் கௌரவம் போன்ற ஏனைய உரிமைகளையும் பூரணமாக அனுபவித்தல் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கு அத்தியாவசியமாயிருப்பதால் இக்கடப்பாடு நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

வீடமைப்பு மற்றும் மீள் குடியேற்ற செயன்முறை தொடர்பான தகவல்களின் மட்டம், கலந்தாலோசித்தல் என்பன பற்றிய பொதுவான திருப்தியின்மை சுனாமி காரணமாக உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் மத்தியில் நிலவுகின்றது. உண்மையான சேதம், மீள் நிர்மாணிப்பதற்குரிய செலவினம் என்பவற்றுடன் ஒப்பிடுகையில், உரிமையாளரினால் ஊக்குவிக்கப்படும் நிரந்தர வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பண ரீதியான இழப்பீடு போதிய தாயிருக்கவில்லை. மேலும் இரண்டரை இலட்சம் ரூபா இழப்பீட்டு நிதியைக் கொண்டு பெரிய வீடுகளைக் கொண்டிருந்த குடும்பங்கள் தங்களுடைய வீடுகளை பூரணமாக புனரமைக்க முடியாதுள்ளன. கொடையாளர்களினால் ஊக்குவிக்கப்படும் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் சில அ.சா.நிறுவனங்களும், ச.அ.சா.நிறுவனங்களும், நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளின் உண்மையான வடிவமைப்பில் பயனாளிகளை ஈடுபடச் செய்வதனால், அவர்களின் பங்கேற்பை இலகுபடுத்துவதன் மூலம் சுனாமியினால் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுடன் அதிகளவிலான இடைத் தொடர்பாடலைக் கொண்டிருந்தன. எவ்வாறாயினும், இப்பங்கேற்கும் முயற்சிகள் கூட முரண்பாடுடையனவாகக் காணப்படுவதுடன், எந்த அ.சா.நி அல்லது ச.அ.சா.நிறுவனம் ஈடுபட்டுள்ளது என்பதிலும் தங்கியுமிருந்தன.

அரசாங்கம் ஒவ்வொரு தனிநபரினதும் தேவைகளைக் கருத்தில் கொள்ளவேண்டும் என எதிர்பார்ப்பது, நடைமுறைச் சாத்தியமற்றதும் பயனற்றதுமான ஒன்றாகும். எனினும், சுனாமி காரணமாக உள்நாட்டில் இடம் பெயர்ந்த ஒவ்வொருவருடைய தேவைகளையும் பெருமளவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணிப்பதால், இக்குறைபாடுகள் கவனத்தில் கொள்ளப்படாதனவைபோல தெரிகிறது. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் திட்டமிடலிலும் அவற்றின் முகாமைத்துவத்திலும், சுனாமி காரணமாக உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் முழு அளவில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதையும் அவர்களின் பங்கேற்றலையும் உறுதி செய்து கொள்வதற்கு அதிகாரிகள் மேலும் கூடுதலான முயற்சிகளை எடுத்தல் வேண்டும்.

***போதியளவு வீட்டு வசதிக்கான உரிமை.***

போதுமான அளவு வீட்டு வசதிக்கான உரிமை தொடர்பாக வீடமைப்பு மற்றும் மீள் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் பல அக்கறைகளை வெளிக்காட்டியுள்ளன. மேலும், போதுமான அளவு வீட்டு வசதிக்கான உரிமையானது சுகாதாரமும் ஆரோக்கிய வசதிகளும், குடும்ப வாழ்க்கையும் அந்தரங்கமும், கௌரவம், போதுமான அளவு வாழ்க்கைத்தரம் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளது.

பல இடைத்தங்கல் வாழ்விட முகாம்களில் வாழ்க்கை நிலைமைகள் தரக்குறைவாயுள்ளன. அநேக இடைத்தங்கல் வாழ்விடங்களில் நீர், சுகாதார வசதிகள் என்பன மோசமான அளவுக்கு பற்றாக்குறையாக உள்ளன. வாழ்விட முகாம்களில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் சிசுக்களையுடைய தாய்மார்கள் ஆகியோரின் சுகாதார, அந்தரங்கத் தேவைகளுக்கு வசதிகளின் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவு காணப்படுகிறது. இவற்றுடன் வாழ்விட கட்டமைப்புகள் மிகச்சிறிய இடப்பரப்பையும் போதிய அளவு காற்றோட்ட வசதியுமற்றுக் காணப்படுவதுடன், இவற்றில் கூடிய வெப்பம் நிலவுவதால் இரவில் மக்கள் வெளியே உறங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

மேலும், நிரந்தரமான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் தாமதமும் முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. கொடையாளர்களினால் ஊக்குவிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள பல வீடுகள் தரக்குறைவானவையாகக் காணப்படுவதுடன் தரமுயர்த்தப்படவேண்டிய தேவையையும் கொண்டுள்ளன. இத்துடன் உரிமையாளரினால் ஊக்குவிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பலரும் பணக்கொடுப்பனவில் ஒன்று அல்லது இரண்டு தவணைப் பணத்தை மாத்திரமே பெற்றுக் கொண்டனர். மேலே குறிப்பிட்டவாறு அழிக்கப்பட்ட வீடுகளை மீள நிர்மாணிப்பதற்கு கிடைக்கப் பெற்ற இழப்பீட்டுப் பணம் போதாமலிருந்தது. கொடையாளர்களினால் ஊக்குவிக்கப்படும் நிரந்தர வீடமைப்புத் திட்டம் அம்பாறையில் ஆரம்பமாகவுள்ளது.

சுனாமியின் பின் ஒரு வருடத்துக்கும் கூடுதலான காலம் கடந்து விட்ட இவ்வேளையில், இவை உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் மனித உரிமைகளை மிக மோசமாகப் பாதிக்கும் நியாயமற்ற தாமதமும் பற்றாக்குறைகளுமாகும்.

***நடமாட்டத்துக்கான சுதந்திரம் மற்றும் வாழ்விடத்தைத் தெரிவுசெய்தல் என்பவற்றுக்கான உரிமை.***

வீடமைப்பு மற்றும் மீள் குடியேற்றக் கொள்கைகள், சுனாமி காரணமாக உள் நாட்டில் இடம்பெயர்ந்தவர்களது நடமாட்டத்துக்கான சுதந்திரம் மற்றும் வாழிடத்தைத் தெரிவு செய்தல் என்பவற்றுக்கான உரிமையைப் பாதித்துள்ளது. குறிப்பாகப், பாதுகாப்புவலயக் கொள்கை பற்றி உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சிலர் தமது சொந்தக் காணிகளுக்கு திரும்பி வந்து மீள நிர்மாணிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்துள்ள போது, ஏனையோர் இழப்பீட்டைப் பெற்றுக் கொண்டு வேறிடத்தில் தாங்களாகவே குடியமர்வதற்கு விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.

நடமாட்டத்துக்கான சுதந்திரம் மற்றும் வாழிடத்தைத் தெரிவு செய்தல் என்பவற்றுக்கான உரிமை, தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏனைய உரிமைகளுக்கு முரண்படாதவாறு சில அனுமதிக்கக் கூடிய கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படலாம். சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது பொது மக்கள் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதைக் கவனத்தில் கொண்டு காணிப்பயன்பாட்டில் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரமும் பொறுப்பும் உண்டு. எவ்வாறாயினும் இக்கட்டுப்பாடுகள், கவனத்தில் கொள்ளப்படும் பொதுமக்கள் பற்றிய கொள்கை நலனுக்கு விகிதாசாரப்படி அமைதல் வேண்டும். தடை வலயத்துள் வசிப்பவர்களுக்கான தெரியப்படுத்தப்படாத மீள் குடியேற்றக் கொள்கையானது, அவர்கள் வேறிடத்தில், அவ்வாறாயின் எவ்விடத்தில் குடியமர விரும்பியிருப்பார்களென்ற அவர்களது கருத்துக்களைக் கவனத்தில் கொள்ளாமல் மித மிஞ்சிய கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளதுடன் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் நடமாட்டத்துக்கான சுதந்திரத்துக்கும் வாழிடத்தை தெரிவு செய்வதற்குமான உரிமையைப் பாதிக்கிறது.

***சமத்துவத்துக்கும் பாரபட்சம் காட்டப்படாமைக்குமான உரிமை.***

சுனாமி காரணமாக உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கு வீடமைப்புக்கான உதவிகளை வழங்குவதில் தன்னிச்சையான அல்லது பாரபட்சமான நடைமுறைகளும் கூட பின்பற்றப்பட்டுள்ளன என்னும் குறைபாடுகள் எழுப்பப்பட்டுள்ளன. இது அவர்களின் சமத்துவமாக நடத்தப்படுவதற்கும் பாரபட்சம் காட்டப்படாமைக்குமான உரிமையைப் பாதிக்கும் செயற்பாடாகும்.

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் முஸ்லிம்கள் வீடமைப்பதற்காக காணியைப் பெற்றுக்கொள்வதற்குத் தடுக்கப்பட்டுள்ளனரென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட அயல் பிரதேசங்களைச் சேர்ந்த உள் நாட்டில் இடம் பெயர்ந்த முஸ்லிம்களுக்கு பெறக்கூடியதாயிருக்கும் காணியை ஒதுக்கீடு செய்யக் கூடாதென சில தமிழ்க் குழுக்கள் இப்பகுதிகளிலுள்ள அரசாங்க அதிகாரிகளுக்கு அழுத்தத்தைக் கொடுத்ததாக புகார் கூறப்பட்டுள்ளது. மேலும் சேதம் பற்றிய கணிப்பீட்டுச் செயன்முறையிலும், பயனாளிகளின் பட்டியல் தயாரிப்பிலும் அரசியல் தலையீடுகள் மற்றும் அல்லது பாரபட்சம் காட்டப்பட்டமை பற்றிய குற்றச் சாட்டுகளும் கூறப்பட்டன. ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுத் தொகுதிகளின் நிர்மாண வேலைகளை ச.அ.சா.நிறுவனங்கள் பூர்த்தி செய்த பின்னர், அரசியல்வாதிகள் தன்னிச்சையாக பயனாளிகளின் பட்டியலை மாற்றியமைத்த சம்பவங்களும் முறையிடப்பட்டுள்ளன. மேலதிக இழப்பீட்டைப் பெறுவதற்காக, சேதம் பற்றிய கணிப்பீட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள் தமது உறவினர்களின் பகுதி சேதமடைந்த வீடுகளை முற்றாக சேதமடைந்தவையென கணிப்பீடு செய்து பாரபட்சத்துடன் நடந்து கொண்டதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆண்கள் மட்டுமே குடியிருப்பின் பிரதான குடியிருப்பாளர்களாக உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டமையால் வீடமைப்பு உதவியைப் பெற்றுக் கொள்வதில் குறிப்பாகப் பெண்கள் பாரபட்சத்துக்குள்ளானார்கள்.

இந்த நடைமுறைகள், வீடமைப்புக்கான உதவிகளை வழங்குவதில் சமத்துவம் மற்றும் பாரபட்சம் காட்டாமை என்பவற்றைப் பின்பற்ற வேண்டிய அரசாங்கத்தின் கடமை மீறப்பட்டுள்ளமையை எடுத்துக் காட்டுகின்றன. மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் சுனாமி காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் சமமாகவும் பாரபட்சமின்றியும் நடத்தப்படவேண்டிய அவர்களது உரிமைகளை உறுதி செய்து கொள்வதற்கு உரிய அதிகாரிகள் தமது முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த பெண்களுக்கான சிறந்த எதிர்காலம்

**சர்வதேச மகளிர் தினம் 2006- மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் செய்தி வெளியீடு**


உலகளாவிய ரீதியில் பெண்களின் உரிமைகளுக்காகவும் அதன் பாதுகாப்புக்கும் மேம்பாட்டுக்கும் பல வருடங்களாகக் குரல் கொடுக்கப்பட்டு வருகின்றது. இங்கு இனங்காணப்பட்ட சில பிரச்சினைகளாகப் பின்வருவன விளங்குகின்றன: பெண் தொழிலாளர்கள், குடும்ப வன்முறை, குழந்தை பெற்றுக் கொள்வதற்கான விருப்பம், பாலியல் ரீதியான ஆதிக்கம், பாலியல் துன்புறுத்தல், பெண்களும் HIV/AIDS உம், பெண்களும் ஆயுதப்போராட்டமும், ஆட்கடத்தல், குடும்பத்தில் பெண்களின் அந்தஸ்தும் சட்ட அந்தஸ்தும். இந்தப் பலவீனங்களையும் பிரச்சினைகளையும் அணுகித் தீர்ப்பதற்குப் பல்வேறு கருத்திட்டங்களும் வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், மனிதனால் உருவாக்கப்பட்ட அல்லது இயற்கையால் நிகழ்ந்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. உ.நா.இ.பெண் தன்னுடைய வீடு வாசல்களை இழந்தது மட்டுமன்றி நிச்சயமற்ற எதிர்காலத்தை நோக்கிச் செல்ல உந்தப்படுகின்றாள். பலவித தடைகளையும் தாண்டியே தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்றாள். விபரிக்கமுடியாத பல வேதனைகளை உளவியல் ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் அனுபவிக்கின்றாள். இடப்பெயர்வு நிகழும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும், பெண்களே குடும்பத்தின் முழுச் சுமையையும் சுமக்கவேண்டிய நிர்ப்பந்தம் எழுகின்றது. மனைவியாகவும் தாயாகவும் செயற்படும் பெண்கள் தங்கள் குழந்தைகளின் பசியைப் போக்கி, உடல் உள நலன்களையும் கவனித்துக் கொள்கின்றார்கள். நெடுந்தொலைவு சென்று குடிதண்ணீர் பெற்று வருவது போன்ற பல்வேறு கடமைகளையும் செய்யவேண்டிய தேவை இவர்களுக்கு உள்ளது. மீள்குடியேற்றம், அல்லது மாற்று இடத்தில் குடியேற்றம் போன்றவை இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அமுலிலுள்ள சட்டங்களும் ஒழுங்கு முறைகளும் பெண்களுக்கு காணி மற்றும் சொத்து உரிமைகளை வழங்க மறுத்துள்ளன.

இலங்கையைப் பொறுத்த வரையில், உள்நாட்டுக் குழப்பங்கள், போர் மற்றும் சுனாமி கடற்பேரனர்த்தம் நிலவிய காலப்பகுதிகளில் உள்நாட்டு இடப்பெயர்வும் அதே போன்று வெளியக இடப்பெயர்வும் அதன் உச்சத்தை எட்டியிருந்தது. தற்சமயம், அரசாங்க அதிகாரிகளின் தெளிவற்ற சட்ட ஒழுங்கு முறைகள் சீர்திருத்தப்பட்ட வேண்டும் என்று பெரும்பாலான மக்கள் குரல் கொடுத்துள்ள போதும் மீள்குடியேற்றம், மாற்று இடத்தில் குடியேற்றம் தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு மட்டங்களிலும் இடம்பெறுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் அல்லது கணவனை இழந்த பெண்கள் உரிமைப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் சட்டம் தடையாக விளங்குகின்றது. இலங்கைப் பெண்கள் தமது காணி மற்றும் சொத்து உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக எழும் சவால்களை விவாதிப்பதற்கு சட்ட வல்லுனர்கள் முன்வரவேண்டிய தேவையை இது வலியுறுத்துகின்றது.

**ஏனைய உரிமைகளைப் பெறுவதற்கு முதன்மையானவை காணி மற்றும் சொத்து உரிமைகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது**

இடம்பெயர்ந்த பெண்களின் காணி மற்றும் சொத்துரிமை தொடர்பான பிரச்சினைகள் உடனடியாகக் கவனத்தில் எடுக்கப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளாக விளங்குகின்றன. இலங்கையைப் போன்று பல்லினத் தன்மை, பல் கலாச்சாரம் நிலவும் சமூகம் ஒன்றில் பின்பற்றப்படும் சட்டங்கள் வெவ்வேறு கலாச்சார, சட்ட மரபுகளின் அடிப்படையிலிருந்து பரிணாமம் பெற்று வந்தமையால், சற்று நெகிழ்வான போக்கைக் கொண்டு விளங்குகின்றன. பெண்கள் மீது சாதாக பாதக தாக்கங்களைக் கொண்டிருந்த போதும், சமூகத்தில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால், பெண்கள் மத்தியில் நிலவும் காணி மற்றும் சொத்துப் பகிர்வு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவை பெரிதும் உதவுகின்றன. இடம்பெயர்ந்த பெண்கள் தம்முடைய காணி மற்றும் சொத்துரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய தேவை முக்கியமாகிவிட்டிருக்கின்றது. நிலையானதொரு வாழ்க்கையை அனுபவிக்கும் பெண்கள் கூட, காணி மற்றும் சொத்து தொடர்பான நாளாந்தக் கொடுக்கல் வாங்கல்களில் பல இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியேற்படுகின்றது. பெண்கள் தமக்கு உரித்தான பிற உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அடிப்படையாகவும் முதன்மையாகவும் விளங்குவது காணி மற்றும் சொத்துரிமை என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.



**நிந்தவூர் உ.நா.இ. முகாமிலிலுள்ள பெண்கள்**

இடம்பெயர்ந்த பெண்கள் உள்ளிட்ட அனைத்துப் பெண்களும் தமது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பவும் அவர்களுக்கு நம்பிக்கையூட்டவும் உதவக்கூடிய வகையில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் (**உ.நா.இ.விசேட ஏற்பாடுகள் சட்டம்**)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவராத குரல்கள்

**புலேந்திரா தர்மேந்திரன் (மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு)**

சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றும் போரினால் பாதிக்கபட்ட உ.நா.இ.க்கு நேரடி நிவாரண உதவிகளை வழங்குவதில் ஈடுபட்டு வரும் CHA ஊழியரின் அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட சில உண்மைச் சம்பவங்கள் இங்கே தரப்படுகின்றன.

***மன்னார்***

23 டிசம்பர் 2005 அன்று கிளைமோர் வெடி விபத்தில் பதின் மூன்று கடற்படையினர் கொல்லப்படும் வரையிலும் விக்டோரியா கிராமம் வழமையான அமைதியில் மூழ்கியிருந்தது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் பல உயிர்கள் கொல்லப்பட்டன, வாழ்வாதாரங்கள் சீரழிந்தன. நூற்றறைம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. இந்தச் சம்பவம், மன்னார் தீவின் சிறிய மீன்பிடிக் கிராமமும் நூற்றுக்கணக்கான குடும்பங்களை மட்டுமே கொண்டிருந்த விக்டோரியா கிராமத்தின் மீது பெரிதும் பாதிப்பை உண்டு பண்ணியிருந்தது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையும், மேரியின் கணவருமான ரமேஷின் உழைப்பை நம்பியே அவரின் குடும்பம் வாழ்ந்து வந்தது. மீன்பிடித் தொழில் மூலம் தனது குடும்பத்தைப் பட்டினியிலிருந்து காப்பாற்றி வந்தார். தனது குடும்பத்தாருடன் சேர்ந்து கிறிஸ்துமஸ் பெருநாளைக் கொண்டாடத் தயாராகியிருந்த வேளையிலேயே இப்பெருந்துயரம் நிகழ்ந்தது. குண்டுவெடிப்பையும் அதனைத் தொடர்ந்த துயரச் சம்பவத்திலும் எல்லாமே ஒரு கணத்தில் மாறி விட்டிருந்தன. கிளேமோர் தாக்குதலைத் தொடர்ந்த வன்முறைச் சம்பவத்தில் ரமே' தன்னுடைய மனைவியையும் ஒரு குழந்தையையும் இழந்து போயிருந்தார். இதன் பின்னர் தேவாலயம் ஒன்றில் அடைக்கலம் புகுந்த ரமேஷிற்கு உணவும் உடையும் வழங்கப்பட்டன. இங்கு 30 நாட்களுக்கு மேல் தங்கியிருந்த ரமேஷ், அதன் பின்னர் தனது வீட்டுக்குத் திரும்பியபோதும் அந்தத் துயர நினைவுகளுடனேயே நாட்களைக் கழிக்க வேண்டியிருந்தது. இருந்தபோதும், வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டும் என்று ரமேஷ் விரும்புகின்றார். தன்னுடைய அப்பாவி மனைவியையும் குழந்தையையும் கொன்றவர்களை நீதிக்கு முன்னால் நிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இவர் உள்ளார். மன்னார் நீதிமன்றில் தனக்கு நேர்ந்த கொடுமைக்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு அது இப்போதும் விசாரணையில் உள்ளது. இதன் மூலம் அவர் தனது மனைவியையோ அல்லது மகனையோ உயிருடன் பெற முடியாது. ஆயினும் இந்த இரண்டு தசாப்த கால இனப் போருக்கு ஒரு நீடித்த நிலையான தீர்வு எட்டப்படுமானால் எதிர்காலத்தில் இவ்வாறான இழப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கக் கூடியதாயிருக்கும்.

***திருகோணமலை***

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பல்லினம் வாழும் சிறிய கிராமமான கிளிவெட்டியைச் சேர்ந்த ஜீவரட்ணம் தேவி, 1990ல் இனக் கலவரம் உச்சக்கட்டத்தில் இருந்த வேளையில் தன்னுடைய கணவரையும், தனது மூத்த மகனையும் இழந்து போயிருந்தார். ஆயினும் தொடர்ந்தும் கிளிவெட்டி நகரிலே தனது மகளுடனும் இளைய மகனுடனும் வாழ்ந்து வந்தார். பாதுகாப்பு நிலைமைகள் மோசாமாகும் போதெல்லாம் அடிக்கடி அவர்கள் இடம்பெயர நேரிட்டது. ஜனவரி 9ம் தேதியன்று படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு நிலைமைகள் ஸ்திரமற்றதாகிச் செல்கின்றன. தேவி ஈச்சிலம்பற்றுக்கு இடம் பெயர்ந்து சென்றபோது படகுத்துறை முகாமில் அவருக்குத் தங்குமிட வசதி அளிக்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களும் இவருடைய அடிப்படைத் தேவைகளையும் ஏனைய தேவைகளையும் நிறைவேற்றியிருந்தன. அவர்கள் தம்முடைய சொத்துக்கள் உடமைகள் அனைத்தையும் கைவிட்டு விட்டு வந்துள்ளதால் தமது வீடுகளுக்குத் திரும்பச் செல்ல வேண்டும் என்ற துடிப்பில் உள்ளனர். அறுவடை செய்யப்பட வேண்டியுள்ள அவர்களுடைய வயல் நிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளதால், பிறர் களவாடிச் செல்லும் நிலைமையும் கட்டாந்தரையாகிப்போகும் நிலைமையும் காணப்படுகின்றன. முகாம்களில் வாடித் தவிக்கும் இந்த மக்கள் தம்முடைய வீடுகளுக்குத் திரும்பிச் சென்று அமைதியான வாழ்வை வாழக்கூடிய ஒரு நல்ல எதிர்காலத்தை எதிர் பார்க்கின்றார்கள்.

ரமேஷ் மீன்பிடித் தொழில் செய்பவராகையால், அவருக்கு மீன்படி வலைகள் மிகவும் அவசரத் தேவையாகியுள்ளன. அத்துடன் இவர் இதற்கான கோரிக்கையைப் பல அ.சா.நிறுவனங்களிடமும் முன்வைத்திருந்தார். அவர்களிடமிருந்து இப்பொழுதும் பதிலை எதிர்பார்த்துக் காத்திருப்பதுடன், தனது குழந்தையினதும் தனதும் வயிற்றுப் பசியைப் போக்குவதற்குப் பெரிதும் போராடுகின்றார்.



**ஈச்சசிலம்பற்று படகுத்துறை முகாமில் வயதுவந்தவர்கள் சிலர் அளவாலாவுதைக் காணலாம். இடப்பெயர்வானது வயது வந்தவர்களை உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஈச்சிலம்பற்று படகுத்துறை முகாம்**

ஜெயரட்ணம் தேவிக்குத் தன்னுடைய வீட்டையும், மலசலகூட வசதிகளையும் புனர் நிர்மாணம் செய்யவேண்டிய பாரிய தேவை உள்ளது. எதோ ஒரு வழியில் உதவிகள் கிடைக்கும் என்றும் அடுத்த பருவ மழைக்காலத்திற்கு முன்பாகத் தன்னுடைய வீட்டைப் புனர்நிர்மாணம் செய்யக் கூடியதாயிருக்கும் என்றும் இவர் நம்பிக்கை கொண்டுள்ளார்.

ரமேஷ், ஜெயரட்ணம் தேவி ஆகிய இந்த இருவருடையதைப் போன்று மேலும் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. உ.நா.இ. தம்முடைய சொந்த இடங்களுக்குப் பாதுகாப்பாகச் திரும்பிச் செல்ல உதவுவதற்கும் அதனை இலகுபடுத்துவதற்கும் அரசாங்கமும் ஏனைய பல நிறுவனங்களும் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றபோதும், இவர்கள் அனைவரும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் ஒன்றுள்ளது. அதாவது இன்னோரன்ன அல்லல்படும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் உண்மையில் விரும்புவது நீடித்த நிலையான சமாதானத்தையே. அதுதான் இவர்களை அச்சமோ குழப்பங்களோ இல்லாததொரு வாழ்க்கையை வாழச்செய்வதுடன், தமது குழந்தைகளுக்கும் சுபீட்சமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுக்கவும் உதவும்.

**உள்நாட்டு இடம் பெயர்வு பற்றிய புருக்கிங்ஸ்-பேர்ன் கருத்திட்டத்தின் ஆதரவை நாம் பெரிதும் போற்றுகின்றோம்.**

UNIVERSITÄT BERN

## அமைப்புகள் பற்றிய விளக்கம்

### CHA

மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு இலங்கையில் பணியாற்றுகின்ற, பணிக்கு ஆதரவளிக்கின்ற அமைப்புகளின் இணையமாகும். CHA தனது அங்கத்துவ அமைப்புகள் மூலமாக, குழந்தைகள், முதியோர், ஊனமுற்றோர், பெண்கள், காயமடைந்தோர், சிறைக்கைதிகள், அகதிகள், இடம் பெயர்ந்தோர், வறுமை நிலையில் வாழ்வோர் அல்லது முரண்பாடு மற்றும் சுனாமியின் பாதிப்பால் துன்புறுவோர், இழப்புக்கு உள்ளானோர் போன்று சமூகத்தில் மிகவும் பாதிப்புக்கு உட்படக் கூடியவர்களது அடிப்படை உரிமைகளையும் வாழ்வாதாரங்களையும் பாதுகாப்பதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

### CPA

மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனம் (CPA) பொதுக் கொள்கை சம்பந்தமான விவாதத்துக்குச் சிவில் சமுதாயத்தின் ஜீவாதாரமான பங்களிப்பை வலுப்படுத்த வேண்டிய தேவையுள்ளது என்ற நம்பிக்கையில் 1996ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. CPA ஆய்வு மற்றும் பரிந்துரை வேலைத்திட்டங்களுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இந்த வேலைத்திட்டங்கள் மூலமாக, பொதுக் கொள்கைகள் விமர்சிக்கப்பட்டு, மாற்றுவழிகள் இனங்காணப்பட்டுப் பரப்பப்படுகின்றன. CPA ஒரு சுயாதீனமான, பக்கச் சார்பற்ற அமைப்பு. இது சர்வதேச மற்றும் இருதரப்பு நிதியிடல் அமைப்புகள், நிதியங்களிடம் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்கின்றது.

### உ.நா.இ.டம்பெயர்ந்தவர்களுக்கான தீர்வுத்திட்டம் - HRC

மனித உரிமைகள் ஆணைக் குழுவானது உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் உரிமைகள் உள்ளடங்கலாக, மக்களின் சிவில், அரசியல் உரிமைகள், சமூக-பொருளாதார, கலாச்சார உரிமைகள் ஆகியன சம்பந்தப்பட்ட பிரச்னைகள் தொடர்பில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது. 2002ம் ஆண்டு முதல் இந்த ஆணைக்குழு, **உள் நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான தேசியப் பாதுகாப்பு மற்றும் நிரந்தரத் தீர்வுகளுக்கான திட்டம்** என்ற பெயரில் உ.நா.இ.பெயர்ந்த மக்களினதும் அகதிகளதும் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருவதற்காகப் பாடுபட்டு வருகின்றது. அதற்கு வவுனியா, யாழ்ப்பாணம், புத்தளம், மன்னார், மட்டக்களப்பு, திருக்கோணமலை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் தனிக் கிளைகள் உள்ளன.

ஆசிரியர் குழு

பவானி பொன்சேகா
துஷிங்கா அபேசேகர
சுரான் திசாநாயக்க

பிரசுரத்துக்கான ஆக்கங்களின் அடிப்படையில் உங்களின்கருத்துக்கள், ஆலோசனகள், பங்களிப்புக்களை நாம் வரவேற்கின்றோம்.

தொடர்புகட்கு:
உ.நா.இ செய்திமடல்
மே.பா. மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு
86, ரொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 7.
தொலைபேசி/தொலைநகல்: 4610943/4
மின்னஞ்சல்: advocacy@cha.lk

Printed at Design Systems - Tel: 4936823

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org